ஈழநாடு 23 Sep 2017 EELANADU

# வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடாவின் செயற்பாட்டு அறிக்கை 06 மார்ச் 2011 முதல் 15 செப் 2017 வரை

வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடாவின் செயற்பாட்டு அறிக்கை (Mar 06, 2011 - Sep 15, 2017) வரை

1) பல்கலைக்கழக மாணவர்களுக்கான நிதி உதவித் திட்டம்: ($ 58, 818.00)

2011 யூன் மாதம் முதல் நடைமுறையில் உள்ள இத்திட்டத்தின் மூலம் தற்பொழுது 14 மாணவர்கள் பயன் பெறுகின்றார்கள் (யாழ் பல்கலைகழகம்-7, கிழக்குப் பல்கலைக் கழகம்-6, சபரகமுவப் பல்கலைக் கழகம்-1) மாதம் ஒன்றுக்கு மாணவர் ஒருவரு க்கு தலா 3,000.00 ரூபா வீதம் மாதாமாதம் 42, 000.00 ரூபா நிதியுதவியை தற் பொழுது வழங்கி வருகின்றோம்.

2) கல்லூரியின் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான நிதி உதவித் திட்டம்: ($ 6, 643.00) இத்திட்டத்தின் மூலம் குடும்ப வருமானங் குறைந்த 4 க.பொ.த உயர்தர வகுப்பு விஞ்ஞானப்பிரிவு மாணவர்கள் யாழ்ப்பாணம் சென்று ரியூசன் கற்றலுக்கான வசதியைப் பெற்றுள்ளார்கள். மாணவர் ஒருவருக்கு மாதம் 2,000.00 ரூபா வீதம் மாதா மாதம் 8, 000.00 ரூபா நிதி யுதவியை தற்போது வழங்கி வருகின்றோம். இத் திட்டம் 2012 ஒக்ரோபர் மாதம் முதல் நடைமுறையில் உள்ளது.

3) 6,7, 8, 9, 10, 11ம் வகுப்பு மாணவர்களுக்கான பரிகார கற்பித்தல் செயற்திட்டம்: ($ 11, 349.00)

எமது கல்லூரியிலுள்ள 25 வீதமான மாணவர்கள் அடிப்படை எண்ணறிவு மற்றும் எழுத்தறிவில் மிகவும் பின் தங்கியவர்களாக இருக்கின்றார்கள். இவர்களு க்கான விசேட பரிகார கற்பித்தல் செயற்திட்டத்திற்கு மாதம் ஒன்றிற்கு 25, 000.00 ரூபாக்கள் வீதம் வழங்கி வருகின்றோம். இத்திட்டம் 2013 ஏப்ரல் மாதம் முதல் நடைமுறையில் உள்ளது.

4)ஆசிரியர் பணி போற்றல் செயற்திட்டம்: ($ 619.00)

மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு உறுதுணையாக இருப்பதற்கு ஆசிரியர் பணி போற்றல் செயற்றிட்டம் உந்துசக்தியாக அமையும் என்ற நம்பிக்கையில் 5 ஆசிரியர் களுக்குக் குரு கருணை ஒளி விருது வழங்குவதென்று தீர்மானித்து ஒவ்வொரு ஆசிரியருக்கும் 10 ஆயிரம் ரூபா ரொக்கப்பணமும் பாராட்டுக் கேடயமும் 01-11-2016 அன்று நடைபெற்ற எமது கல்லூரித்தினப் பரிசளிப்பு விழாவில் எமது சங்கத்தின் சார்பில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

கடந்த ஆறரை ஆண்டுகளில் மொத்தம் 82, 157.45 டொலர்கள் அனுப்பப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மாணவர்களுக்கான உதவித் திட்டம்: $ 58, 818.00

உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான உதவித் திட்டம்: $ 6,643.00

6 முதல் 11ம் வகுப்பு வரையான மாணவர்களுக்கான பரிகார கற்பித்தல் செயற்திட்டம்: $ 11, 349.00

ஆசிரியர் பணிெ பாற்றல் செயற்திட்டம்: $619.00

அதிபர் பிரதிஅதிபர்களுக்கு 2 Laptops அன்பளிப்புக் கான செலவு: $ 1, 090.45

கல்லூரிக்கு பயிற்சிப் புத்தகங்கள் அன்பளிப்பு: $90.00

கல்லூரிக்கு Photo Copier & Printer அன்பளிப்புக்கான செலவு: $ 1, 778.00

பல்கலைக்கழக மாணவர் கூடைப்பந்தாட்ட நிதியுதவி $232.00

2012ம் ஆண்டு தமிழ்த்தினப் போட்டிக்கான நிதியுதவி: $ 317.00

2011ம் ஆண்டு அலுமாரிகள் வாங்குவதற்கான நிதியுதவி: $ 1,221.00

காலத்தின் கட்டாயமான இச்சீரிய பணியினைத் தொட ர்ந்து நடைமுறைப்படுத்துவ தற்குச் சங்கத்தின் அங்க த்தவர்கள், கல்லூரியின் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் மற்றும் புலம்பெயர் மண்ணின் வர்த்தகப் பெருமக்கள் அனைவரும் தமது முழுமையான ஆதரவையும் தம்மால் இயன்ற பங்களிப்பையும் நல்குமாறு சங்கத்தின் சார்பில் அன்புரிமையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

பள்ளத்தில் கிடப்போரைப் படிக்கட்டில் ஏற்றிவிட அறஞ்சார்ந்த பணிபுரிவோம்.

**சி. இளஞ்செழியன் (தலைவர்)**

வேலணை மத்திய கல்லூரிப் பழைய மாணவர் சங்கம்-கனடா